**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **SPL.CC.2/2025** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W.10** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | குமாரவேல் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **24.10.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது முதுநிலை வருவாய் ஆய்வாளராக குன்னம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிகிறேன். 09.11.2022 முதல் 31.08.2023 வரை நான் ஆலத்தூர் வட்டம், கூத்தூர் பகுதி வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அப்போது கொளாக்காநத்தம் பகுதி வருவாய் ஆய்வாளராக இந்த வழக்கு எதிரி பணியில் இருந்தார். 09.12.2022ம் தேதி இந்த வழக்கு எதிரி கையூட்டு பெற்றதாக கூறி லஞ்ச ஒழிப்பு வழக்கில் கைதுசெய்யப்பட்டதாக கேள்விபட்டேன். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மனுவை பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெறும் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் 21.11.2022ம் தேதி முருகானந்தம் த/பெ. ராஜகோபால் பெரம்பலூர் வட்டம், அயிலூர் குடிக்காடு கிராமத்தை சேர்ந்த கொடுத்துள்ளார். அந்த மனுவை வரகுபாடி கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்து 25.11.2022ம் தேதி அப்போதைய வருவாய்ஆய்வாளருக்கு அனுப்பியுள்ளார். அப்போது ஆஜர் எதிரி வருவாய் ஆய்வாளராக இருந்தார். 09.12.2022ம் தேதி

எதிரி கைது செய்யப்பட்ட பிறகு வட்டாட்சியர் சொன்னதின் பேரில் அந்த மனுவின் பேரில் விசாரணை செய்து வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பினேன். நான் விசாரணை மனு தான் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 ஆகும். இது சம்மந்தமாக லஞ்சஒழிப்பு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றம் சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய விசாரணையின் போது மனுதாரர் முருகானந்தம் வரவில்லை. மனுதாரரை செல்போன் மூலம் நான் அழைக்கவில்லை. நான் கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த அறிக்கையை பரிசீலனை செய்து அந்த அடிப்படையில் தான் நான் Statement எழுதி மனுவை அனுப்பிவைத்தேன். அ.சா.ஆ.2 கோப்பில் ஏற்கனவே மனுதாரரை விசாரித்து கிராம நிர்வாக அதிகாரி அறிக்கை மற்றும் வருவாய் ஆய்வாளர் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் அனுப்பிவைத்தேன். நான் கோப்பை அனுப்பிவைத்த நாளில் எனக்கு Incharge உத்தரவு வழங்கப்பட்டதா என்றால் கோப்பை பார்த்து தான் என்னால் சொல்லமுடியும். Incharge போட்டிருப்பதாக வாய்மொழியாக சொன்னார்கள். அ.சா.ஆ.2 கோப்பை அனுப்புவதற்கு முன்னர் பொறுப்பை நான் எடுத்துக்கொண்டதாக Incharge உத்தரவில் கையெழுத்து செய்தேனா என்றால் கையெழுத்து செய்யவில்லை. எதிரி மீது பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக காலம் தாழ்த்த தேவையற்ற சாட்சியாக என்னை சேர்த்துள்ளார்கள் என்றால்சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.